# රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
# அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
# Ministry of Public Services, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව.
சுதந்திர சதுக்கம், கொழும்பு 07, இலங்கை.
Independence Square, Colombo 07, Sri Lanka.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | CS/SLAS/Grade II Promo | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி<br>Date | 2022.03.28 |

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபை பிரதம செயலாளர்கள்
ஆணைக்குழுத் தலைவர்கள்
மாவட்டச் செயலாளர்கள் / அரசாங்க அதிபர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**<u>நாடளாவிய சேவைகளில் *II*ஆந் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்ட உத்தியோகத்தர்களின் தரமுயர்த்தல்களுக்கு ஏற்ப பதவிப் பெயர்களை மாற்றுதல்</u>**

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் நிர்வாக அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து நாடளாவிய சேவைகளின் *II* ஆந் தரத்துக்கு தரமுயர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களின் தரமுயர்த்தல்களுக்கு ஏற்ப பதவிப் பெயர்களை மாற்றுவது தொடர்பில் பின்வருமாறு நடவடிக்கை எடுக்கும்படி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் ஆணை பிறப்பிக்கப்பட்டு அவ்வாணைக்குழுச் செயலாளரின் இலக்கம்: *PSC/EST/05-05/01/2018* மற்றும் *2022.02.07* ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத்தருகின்றேன்.

*I.* குறித்த பதவிகள் *III* மற்றும் *II* ஆந் தரங்களுக்கு இணைந்த பதவியாகவும் மற்றும் பதவிகளை ஏற்றுள்ள உத்தியோகத்தர்களுக்குரிய தரத்துக்கு ஏற்ப பதவிப் பெயர்களை திருத்தியமைக்குமாறு அங்கீகரிக்கப்பட்டிருப்பின், தரமுயர்த்தல்களுக்கு ஏற்ப பதவிப் பெயர்களை மாற்றியமைப்பதற்கு அவசியப்படும் நடவடிக்கைகளை அவ்வுத்தியோகத்தர்களின் சேவை நிலையங்களின் தலைவர்களினால் மேற்கொள்ளுமாறும்,

*II.* அவ்வாறு பதவிப் பெயர்களை மாற்றியமைக்கும் சந்தர்ப்பங்களில், உத்தியோகத்தர் தொடர்ச்சியாக குறித்த பதவியில் சேவையாற்றியிருப்பின், *II* ஆந் தரத்துக்கு தயமுயர்த்தப்பட்ட திகதி அல்லது பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி ஆகிய இரு திகதிகளின் பின்னர் அடுத்துவரும் திகதி முதல் அமுல்நடாத்தப்படும் வகையில் குறித்த பதவிப் பெயரை திருத்தியமைப்பதற்கும்

*02.* மேற்படியான பதவிப் பெயரை மாற்றியதன் பின்னர் உத்தியோகத்தரின் பிரத்தியேகக் கோவையை இற்றைப்படுத்துவதற்காக உரிய தகவல்களை உடனடியாக எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

*03.* மேலும், அதிவிசேட ஊழியர் என்ற அடிப்படையில் இலங்கை திட்டமிடல் சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பாக மேற்குறிப்பிட்ட முடிவுகள் ஏற்புடையதற்றவை எனவும் அவ்வுத்தியோகத்தர்களை தரமுயர்த்துவது தொடர்பில் இதுவரை நடைபெற்ற அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் மாற்றங்களின்றி நிலவுவதாகவும் மேலும் குறிப்பிடுகின்றேன்.

ஒப்பம்./ ஜே. ஜே. ரத்னசிரி

செயலாளர்

அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும்

உள்ளூராட்சி அமைச்சு